Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C. 191/2021** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW9** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | அசோக்குமார் |
| Father/Husband Name | : | முருகேசன் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | கிராம நிர்வாக அலுவலர் |
| Religion | : | |
| Age | : | 28 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.11.2025.

<u>(எதிரி ஆஜர்.)</u>

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது மண்டபம் குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2020ம் ஆண்டு இராமநாதபுரம் தாலுகா நாகாச்சி கிராம குரூப் கிராம நிர்வாக அலுவலராக வேலை பார்த்தேன். நான் பணிபுரிந்த கிராமத்தில் உதவியாளராக தமிழ்செல்வன் பணிபுரிந்தார். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 13.01.2020ம் தேதி கல்கிணற்றுவலசை கிராமத்தில் உள்ள எனது அலுவலகத்தில் நான் காலை 10.00 மணியளவில் இருந்தபோது உச்சிபுளி காவல் நிலைய ஆய்வாளர் போன் செய்து நாகாச்சி கிராமத்தில் உள்ள பழத்தோட்டம் என்ற 5 ஏக்கர் பகுதிக்கு வரச்சொன்னார். நானும், கிராம உதவியாளர் தமிழ்செல்வனும் ஆய்வாளர் கூப்பிட்ட இடத்திற்கு சென்றோம். நாங்கள் அந்த இடத்திற்கு 15 நிமிடத்தில் சென்றோம். அங்கு ஆய்வாளருடன், 3 போலிசார்கள் மற்றும் ஆஜர் எதிரி இருந்தார். எதிரி எங்கள்

முன்பு தானாக முன்வந்து ஆய்வாளரிடம் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். ஆஜர் எதிரி ஆட்டோ வைத்து மோதியதாகவும், அந்த ஆட்டோவை பதுக்கி வைத்திருப்பதாகவும், என்னை கூட்டி சென்றால் ஆட்டோவை சேதுபதி நகர், வன்னிமுத்து மகன் குடோனில் ஒளித்து வைத்திருப்பதாகவும், அதை எடுத்து தருவதாகவும் சொன்னார். அதன் பிரகாரம் வன்னிமுத்து மகன் குடோனுக்கு கூட்டிச் சென்றார். காவல் ஆய்வாளருடன், நான், கிராம உதவியாளர் மற்றும் போலிசாருடன் சென்றோம். எதிரி காவல் ஆய்வாளரிடம் ஒளித்து வைத்திருந்த TN 65 E 9196 என்ற ஆட்டோவை காண்பித்தார். அதன் பிறகு ஆய்வாளர் அந்த ஆட்டோவை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும்,கிராம உதவியாளர் தமிழ்செல்வனும் கையெழுத்து செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.4**. அத்தாட்சி **அ.சா.ஆ.5**. பின்பு ஆய்வாளர் எதிரியுடன் கைப்பற்றப்பட்ட ஆட்டோவுடன் நிலையம் வந்தார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

நான் போலிசார் கேட்டுககொண்டதற்கிணங்க பல நீதிமன்றங்களில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆய்வாளர் என்னுடைய செல்போனுக்குத்தான் கூப்பிட்டார். நான் பழத்தோட்டம் 5 ஏக்கர் இடத்திற்குசென்றபோது ஆய்வாளர் உள்ளிட்ட போலிசார்கள் எதிரிகளுடன் எங்கிருந்து, எப்போது வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை எதிரியை கைது செய்ய வேண்டும், ஒப்புதல் வாக்குமூலம் பெறவேண்டும் என்றுதான் கூப்பிட்டார் என்றால் சரியல்ல, கைது செய்யவேண்டும் என்றுதான் கூப்பிட்டார். என்னுடைய மேலதிகாரியின் அனுமதி பெற்றுத்தான் அயல்பணிக்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக யாரிடமாவது அனுமதி பெற்றேனா என்றால் இல்லை, ஆனால் வட்டாட்சியருக்கு தகவல் தெரிவித்தேன். வட்டாட்சியருக்கு என்ன தகவல் தெரிவித்தேன் என்றால், ஆய்வாளர் கூப்பிடுவதாகவும், செல்லவேண்டும் என்றும் சொன்னேன். நான் ஆய்வாளரிடமிருந்து தகவல் வந்த உடனே வட்டாட்சியருக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தேன். அத்தாட்சி யார்

எழுதியது என்றால் ஆய்வாளருடன் வந்திருந்த காவலர், பெயர் தெரியாது. ஒப்புதல் வாக்குமூலம் யார் எழுதியது என்றால் கணினியில் தட்டச்சு செய்தார்கள். யார் தட்டச்சு செய்தது என்றால் அத்தாட்சியை எழுதிய அதே காவலர்தான். அத்தாட்சி தயார் செய்யும்போது கணினி இருந்ததா என்றால் இருந்தது. அங்கு வைத்தே பிரிண்ட் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை, காவல் நிலையத்திற்கு சென்று பிரிண்ட் எடுத்து வந்தார்கள். எந்த பென்டிரைவில் எடுத்துச்சென்றார்கள். எந்த கணினியில் தட்டச்சு செய்தார்கள், எந்த கணினியில் பிரிண்ட் எடுத்தார்கள், யார் பிரிண்ட் எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்ய அரை மணி நேரம் ஆனது. ஒப்புதல் வாக்குமூலத்தை பிரிண்ட் எடுப்பதற்கு எவ்வளவு நேரமானது என்றால் 1 மணி நேரம். பிரிண்ட் எடுத்து வந்த பிறகுதான் கையெழுத்து போட்டோம் என்றால் சரிதான். நாகாச்சி 5 ஏக்கர் பழத்தோட்டத்திலிருநது தெற்கு திசையில் 1 கிமீ தொலைவில் குடோன் உள்ளது. அங்கு செல்வதற்கு எத்தனை நேரம் ஆனது என்றால் 5 நிமிடம். அந்த குடோன் திறந்துதான் இருந்தது. குடோன் உரிமையாளர் இல்லை. அது குடோன் பயன்படுத்தப்படாத குடோன். அத்தாட்சி தட்டச்சு செய்யப்பட்டு பிரிண்ட் எடுக்கப்பட்டதல்ல, கையால் எழுதப்பட்டது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் எந்த இடத்தில் ஒளித்து வைத்திருக்கிறேன் என்பதை சொல்லியிருக்கிறார் என்றால் சரிதான். குடோன் என்பது காம்பவுண்டுக்குள் உள்ளது என்றால் சரியல்ல, வெட்டவெளி கட்டிடம்தான் குடோன். நான் சொன்ன மாதிரி சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் நான் செல்லவில்லை என்றும், என் முன்னிலையில் யாரும் எந்தவிதமான வாக்குமூலமும கொடுக்கவில்லை என்றும், அதன் அடிப்படையில் எந்த பொருட்களும் எடுத்துக்கொடுககப்படவில்லை என்றும், அ.சாஆ–4 மற்றும் 5 வழக்கம்போல காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் போட்டுவிட்டு தற்சமயம் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.